**30.01.2020**

## பத்திரிக்கை செய்தி

## இன்று (30.01.2020) சென்ட்ரல் மெட்ரோ நிலையம் மற்றும் ஆலந்தூர் மெட்ரோ முதல் சென்ட்ரல் மெட்ரோ வரை மெட்ரோ இரயிலில் இசை நிகழ்ச்சி நடைபெற்றது

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுவதன் ஒரு பகுதியாக, சென்னை முழுவதும் உள்ள பல இசைக் கலைஞர்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து சென்னை மக்களுக்கு தமிழ் கலாச்சாரத்தின் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக இன்று (30.01.2020) ஆலந்தூர் மெட்ரோ முதல் சென்ட்ரல் மெட்ரோ வரை மற்றும் சென்ட்ரல் மெட்ரோவில் (தெரு நிலை) 'சென்னை கலைத் தெரு விழா' இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

ஆலந்தூர் மெட்ரோ முதல் சென்ட்ரல் மெட்ரோ வரை மெட்ரோ இரயிலில் மாலை 05:00 மணிக்கு - அபிஷேக்கின் ஸ்டாண்ட் அப் காமெடி மற்றும் பிந்துமாலினியின் மெல்லிசை நிகழ்ச்சி நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து, மாலை 05:45 மணி முதல் 06:30 மணி வரை சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் (தெரு நிலை), பிரீத்தி பரத்வாஜின் பாரதநாட்டியம் மற்றும் தீபனின் பறையாட்டம் நிகழ்ச்சி நடைபெற்றது.

பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகள் அவர்களின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்து இந்நிகழ்ச்சியினை கண்டு களித்தனர்.

**பிப்ரவரி 2, 2020 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6:30 மணி முதல் இரவு 8:30 மணி வரை** - சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் (தெரு நிலை) “ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை”, இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.